உயர்த்தப்படுகின்றன. நாம் இப்போது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை அரசு பரிசீலிக்கும்.

ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குமாத மொன்றுக்கு உணவுக்காக செலவிடப்படும் தொகை

*வினா எண். 460—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளில் தற்போது உணவுக்காக மாதம் ஆள் ஒன்றுக்கு செலவிடும் தொகை எவ்வளவு?

(ஆ) அதை மேலும் உயர்த்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, சென்னை நகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் ரூ. 80 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது, 15 ரூபாய் உயர்த்தப்பட்டு ரூ. 95ஆக அளிக்கப்படுகிறது

புறநகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் ரூ 65 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது தற்போது ரூ. 15 உயர்த்தப்பட்டு 80 ரூபாயாக அளிக்கப்படுகிறது.

பள்ளி விடுதிகளில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் 45 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த தொகையானது 15 ரூபாய் உயர்த்தப்பட்டு 60 ரூபாயாக அளிக்கப்படுகிறது.

1981–82 கல்வி ஆண்டு முதல் இந்தத் தொகையை செலவிட அரசு நிலை எண். 633, சமூக நலத்துறை நாள் 27–8–1981ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற உதவிகளை ஒரு குடும்பத்தில் 2 பேர்களுக்கு மேல இருந்தால் அளிக்கக்கூடாது என்று மத்திய அரசு

சொல்லி அந்த உத்தரவு அமுல்படுத்தப்பட்டு வருகிறதா? அப்படி என்றால் அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து ஆதி திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த 3வது பிள்ளைக்கும் இந்த உதவித் தொகை கிடைக்குமாறு செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கேள்வி அரிசன விடுதிகளில் தற்போது உணவுக்காக செலவிடும் தொகையை உயர்த்த முடியுமா என்பது குறித்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடிய கேள்வி பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது பற்றியது. மைய அரசு அவ்வாறு 2 பிள்ளைகளுக்கு மேல் ஒரு குடும்பத்திலிருந்து வந்திருந்தால் கொடுக்கக் கூடாது என்று விதித்திருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்த விதிமுறையில்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவகளுக்கு இருக்கும் உணவு விடுதிகளையும், தொழிற் கல்வி படிக்கிற மாணவர்களின் உணவு விடுதிகளையும் நடத்துகிற வார்டன்கள் சில இடங்களிலே ஒருவராகவே இருக்கிறார்கள். இப்படி ஒருவரே இரண்டு மூன்று விடுதிகளைக் கண்காணிக்கிற நிலைமை இருப்பதால் அவர்களால் உணவுப் பொருள்களை வழங்கும் வேலையைச் சரிவர செய்ய முடியவில்லை என்பது போன்ற புகார் அரசுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது, அது உண்மையா?

(முற்பகல் 10·10)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி கண்காணிப்பாளர்கள் ஒரு விடுதிக்கு மேல் பல விடுதிகளைக் கண்காணிப்பதாகவும் அதனால் மாணவர்களுடைய படிப்பில் அவர்களுக்கு கவனக்குறைவு ஏற்படுகின்றது என்றும் தற்போது புகார் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையிலே அத்தகைய நிலைமை இல்லை. எனக்கும் தனிப்பட்ட முறையிலே அப்படிப் புகார் வரவில்லை.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது உதவித் தொகை 80 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது, இப்போது 95 ரூபாயாகக் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் கல்லூரிகளிலே ஜெனரல் ஹாஸ்டல்களிலே இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் 120 ரூபாய் முதல்

150 ரூபாய் வரையிலே செலவு ஆகின்றது. ஆகவே இந்தத் தொகையினை உயர்த்தி 150 ரூபாயாக உதவித் தொகை கொடுக்க அரசு முன் வருமா ?

அடுத்து மத்திய அரசினைப் பற்றிச் சொல்கின்றபோது மத்திய அரசு கொடுக்கின்ற உதவித் தொகை போதுமானதாக இல்லை. அந்தக்கல்லூரி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் கூட ஆண்டு ஒன்றுக்கு 1,200 ரூபாய், 1,300 ரூபாய் கூட செலவாகின்றது. ஆகவே அந்த மீதித் தொகையை நம்முடைய மாநில அரசு கொடுத்து உதவ முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையிலே விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தற்போது 95 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அது போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இப்போது 1981—82ஆம் ஆண்டுதான் இந்த உணவுக்கான உதவித் தொகை உயர்த்தித் தரப்படுகின்றது. வருகின்ற ஆண்டுகளில் நிதிநிலைமையை அனுசரித்து மாணவர்களின் நிலைமையையும் கருத்தில் கொண்டு அரசு இதில் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தற்போது தமிழக அரசு இத்தகைய கல்லூரிகளிலே தங்கிப் பயிலக் கூடிய மாணவர்களுக்காக சிறப்புக் கடனுதவியாக அளித்து வருகின்றது. அதையே அரசு தொடர்ந்து செயல்படுத்தும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தற்போது அரசால் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், கூட்டுறவுத் துறையிலே............ (குறுக்கீடு).............ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றது......